சார்பு நீதிமன்றம், துறையூர்
OS.No.99/2022

**தேதி: 20.06.2024**

பெயர் : சாந்தி (பி.சா.2) க/பெ: கோபால்

**குறுக்கு விசாரணை**

என் அப்பா பெயர் முத்துசாமி. எத் தாத்தா பெயர் மாரிமுத்து. என் அப்பாவுடன் கூடபிறந்தவர் மூன்றுபேர்கள் ஆவார்கள். என்னுடைய வாக்குமூலத்தில் ஏற்கனவே சொத்து பிரிக்கப்பட்டது என்றும் பிரிக்கப்பட்ட சொத்தை மறுபடி பாகம் பிரிக்க வேண்டியதில்லை என்று சொல்லியிருக்கிறேனா என்றால் ஆமாம். யார் யார் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் பழனியாண்டியும், முத்துசாமியும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் ஆமாம். இந்த சொத்து பழனியாண்டிக்கு, இந்த சொத்து முத்துசாமிக்கு என்று பாகம் பிரித்ததற்கு ஆதாரம் உண்டா என்றால் இல்லை. முத்துசாமிக்கு பிரிந்த சொத்தை 2, 3, 4 பிரதிவாதிகள் அனுபவம் செய்கிறோம். முத்துசாமிக்கு பிரிந்த சொத்து 5 ஏக்கர் இருக்கும். முத்துசாமி எந்தவித ஆதாரமும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார் என்றால் ஆமாம். முத்துசாமி சொத்தில் எனது அண்ணன் தமிழ்செல்வனுக்கு ஒரு பங்கு உண்டு என்றால் ஆமாம். எனது பெரியப்பா பழனியாண்டி பூரா சொத்தையும் எழுதிவைக்கவில்லை. அவருக்கு பிரிந்த பகுதி சொத்தைதான் எழுதிவைத்தார். என் வீட்டுக்காரர் கோபால் கல்வித்துறையில் பணிபுரிந்து இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என் அப்பா முத்துசாமி வாத்தியார் வேலை பார்த்து இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என் அப்பா இறந்து ஓய்வூதியம் என் அம்மாதான் வாங்குகிறார். என்னுடைய அண்ணனுக்கு என் அப்பா முத்துசாமி இறந்ததால் கருணை வேலை கிடைத்தது என்றால் ஆமாம். என்னுடைய எதிர்வழக்குரையில் சமாதானமாக பிரித்துக்கொள்ளலாம் என்றாலும் வாதி நீதிமன்றத்திற்கு வந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய எதிர்வழக்குரை பத்தி 9ல் சமரசமாக போலாம் எனற்போதும் வாதிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். என் வீட்டில் என் அப்பா அம்மா ஒன்றாக இருந்தோம். அந்த வீட்டில்தான் செந்தில்வடிவு ஒன்றாக இருந்தார் என்றால் என் அண்ணன் உயிரோடு இருக்கும்போதே என் அம்மா தனியாக இருந்தார். என் அண்ணனும் வாதி செந்தில்வடிவும் பூர்வீக வீட்டில்தான்

குடியிருந்தார்கள் என்றால் ஆமாம். வழக்கு போடுவதற்கு முன்பு வாதியை நாங்கள் விரட்டிவிட்டோமா என்றால் கட்டபஞ்சாயத்து பேசி எங்களை அடிக்க வந்தார்கள். அவர்களாகவே போய்விட்டார். இதையெல்லாம் என்னுடைய எதிர்வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. பழனியாண்டி கிரையம் செய்த இரண்டு சொத்துக்களும் எங்கள் குடும்ப சொத்துக்கள் என்றால் ஆமாம். பழனியாண்டியின் குடும்ப சொத்துக்களை எழுதுவதற்கு முன்பே எங்கள் அய்யா இறந்துவிட்டார் என்றால் ஆமாம். நாங்கள் என் அண்ணனுக்கு 9 வயதாகிருக்கும்போதே என் அய்யா காலமாகிவிட்டார் என்றால் ஆமாம். என் பெரியப்பாதான் குடும்பத்தை காப்பாற்றி சவரட்சணை செய்தார். என் அய்யா இருக்கும்போதே குடும்ப நிர்வாகத்தை என் பெரியப்பாதான் பார்த்துக்கொண்டார் என்றால் ஆமாம். என் பெரியப்பாவிடமிருந்து எந்தவொரு கிரயதொகையுமின்றி 2 கிரய பத்திரங்களை ஏற்படுத்திக்கொண்டோம் என்று சொன்னால் அவருடைய மருத்துவ செலவிற்கு கிரயம் செய்தார். வா.சா.ஆ.13 ஏற்படும்போது என் கணவர் கோபால் உயிரோடு இருந்தாரா என்றால் ஆமாம். என் அப்பாவோடு பத்திரம் எழுத நானும் போனேன் என்றால் ஆமாம். கிரயம் வாங்கும்போது என் பெரியப்பாவிற்கு எவ்வளவு பணம் கொடுத்தோம் என்றால் 2 லட்சம் கொடுத்தோம் அதற்குதான் பத்திரம் எ முதினார் என்றால் ஆமாம். இந்த கிரயம் எல்லாம் உண்மையில்லை பணம் கொடுத்ததாக கூறுவதும் பொய் என்றும் கூட்டுக்குடும்ப சொத்தை கொடுக்காமல் இருப்பதற்காக இவ்வாறு கட்சி செய்கிறோம் என்றுசொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/

(ஒம்/-எம்.ஜெய்சங்கர்)
சார்பு நீதிபதி,
துறையூர்.